ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

# ॥ இருளிரிய ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இருளிரிய ॥

திருவரங்கப் பெருமானைக் கண்டு என்றுகொல் மகிழ்வேன் எனல்

‡இருள் இரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி⋆
இனத் துத்தி அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த⋆
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்⋆
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி⋆
திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி⋆
திரைக் கையால் அடி வருடப் பள்ளி கொள்ளும்⋆
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு⋆ என்
கண் இணைகள் என்று கொலோ களிக்கும் நாளே! (1)

‡வாயோர் ஈர் ஐஞ்ஞூறு துதங்கள் ஆர்ந்த⋆
வளை உடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த செந்தீ⋆
வீயாத மலர்ச் சென்னி விதானமே போல்⋆
மேன்மேலும் மிக எங்கும் பரந்த தன் கீழ்⋆
காயாம்பூ மலர்ப் பிறங்கல் அன்ன மாலைக்⋆
கடி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
மாயோனை மணத்தூணே பற்றி நின்று⋆ என்
வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே! (2)

எம்மாண்பின் அயன் நான்கு நாவினாலும்
எடுத்தேத்தி⋆ ஈர் இரண்டு முகமும் கொண்டு⋆
எம்மாடும் எழில் கண்கள் எட்டினோடும்⋆
தொழுதேத்தி இனிதிறைஞ்ச நின்ற⋆ செம் பொன்
அம்மான் தன் மலர்க் கமலக் கொப்பூழ் தோன்ற⋆
அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
அம்மான் தன் அடி இணைக் கீழ் அலர்கள் இட்டு⋆ அங்-
கடியவரோடென்று கொலோ அணுகும் நாளே! (3)

www.prapatti.com

மாவினை வாய் பிளந்துகந்த மாலை⋆ வேலை
    வண்ணனை என் கண்ணனை வன் குன்றம் ஏந்தி⋆
ஆவினை அன்றுய்யக் கொண்ட ஆயர் ஏற்றை⋆
    அமரர்கள் தந் தலைவனை அந்தமிழின் இன்பப்-
பாவினை⋆ அவ் வடமொழியைப் பற்றற்றார்கள்⋆
    பயில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
கோவினை நாவுற வழுத்தி எந்தன் கைகள்⋆
    கொய்ம் மலர் தூய் என்று கொலோ கூப்பும் நாளே! (4)

இணை இல்லா இன்னிசை யாழ் கெழுமி⋆ இன்பத்
    தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்த⋆
துணை இல்லாத் தொன் மறை நூல் தோத்திரத்தால்⋆
    தொன் மலர்க் கண் அயன் வணங்கி ஓவாதேத்த⋆
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ⋆
    மதில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
மணிவண்ணன் அம்மானைக் கண்டு கொண்டு⋆ என்
    மலர்ச் சென்னி என்று கொலோ வணங்கும் நாளே! (5)

அளி மலர் மேல் அயன் அரன் இந்திரனோடு⋆ ஏனை
    அமரர்கள் தம் குழுவும் அரம்பையரும் மற்றும்⋆
தெளி மதி சேர் முனிவர்கள் தம் குழுவும் உந்தித்⋆
    திசை திசையில் மலர் தூவிச் சென்று சேரும்⋆
களிமலர் சேர் பொழில் அரங்கத்துரகம் ஏறிக்⋆
    கண் வளரும் கடல் வண்ணர் கமலக் கண்ணும்⋆
ஒளி மதி சேர் திரு முகமும் கண்டு கொண்டு⋆ என்
    உள்ளம் மிக என்று கொலோ உருகும் நாளே! (6)

மறம் திகழும் மனம் ஒழித்து வஞ்ச மாற்றி⋆
    ஐம் புலன்கள் அடக்கி இடர்ப் பாரத் துன்பம்
துறந்து⋆ இரு முப்பொழுதேத்தி எல்லை இல்லாத்
    தொன்னெறிக் கண்⋆ நிலை நின்ற தொண்டரான⋆
அறம் திகழும் மனத்தவர் தம் கதியைப் பொன்னி⋆
    அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆



www.prapatti.com

நிறம் திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்⋆
    நீர் மல்க என்று கொலோ நிற்கும் நாளே! (7)

கோல் ஆர்ந்த நெடும் சார்ங்கம் கூனற் சங்கம்⋆
    கொலை ஆழி கொடுந் தண்டு கொற்ற ஒள் வாள்⋆
கால் ஆர்ந்த கதிக் கருடன் என்னும் வென்றிக்⋆
    கடும் பறவை இவை அனைத்தும் புறம் சூழ் காப்ப⋆
சேல் ஆர்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த⋆
    திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
மாலோனைக் கண்டின்பக் கலவி எய்தி⋆
    வல் வினையேன் என்று கொலோ வாழும் நாளே! (8)

தூராத மனக் காதல் தொண்டர் தங்கள்
    குழாம் குழுமித்⋆ திருப் புகழ்கள் பலவும் பாடி⋆
ஆராத மனக் களிப்போடழுத கண்ணீர்⋆
    மழை சோர நினைந்துருகி ஏத்தி⋆ நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும்⋆
    திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
போர் ஆழி அம்மானைக் கண்டு துள்ளிப்⋆
    பூதலத்தில் என்று கொலோ புரளும் நாளே! (9)

‡வன் பெரு வானகம் உய்ய அமரர் உய்ய
    மண் உய்ய⋆ மண் உலகில் மனிசர் உய்ய⋆
துன்ப மிகு துயர் அகல அயர்வொன்றில்லாச்
    சுகம்வளர⋆ அக மகிழும் தொண்டர் வாழ⋆
அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளி கொள்ளும்⋆
    அணி அரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள்⋆
இன்ப மிகு பெருங்குழுவு கண்டு⋆ யானும்
    இசைந்துடனே என்று கொலோ இருக்கும் நாளே! (10)

‡திடர் விளங்கு கரைப் பொன்னி நடுவு பாட்டுத்⋆
    திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக்⋆
    கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால்⋆



www.prapatti.com

குடை விளங்கு விறல் தானைக் கொற்ற ஒள் வாள்⋆
    கூடலர் கோன் கொடைக் குலசேகரன் சொற் செய்த⋆
நடை விளங்கு தமிழ் மாலை பத்தும் வல்லார்⋆
    நலந் திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே (11)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com